முக்கிய ரவுடி படப்பை குணா 5-வது முறையாக

குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது

■ ஸ்ரீபெரும்புதூர்

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம் அருகே மதுரமங்கலம் பகுதியைச் சேர்ந்த முக்கிய ரவுடி படப்பை குணா (47) மீது ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார்சத்திரம், மணிமங்கலம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட காவல் நிலையங்களில் 40-க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் உள்ளன. இவர் பாஜகவில் பிற்படுத்தப்பட்டோர் அணி மாவட்டத் தலைவராகவும் உள்ளார்.

● ரவுடி குணா

இந்நிலையில் மதுரமங்கலம் பகுதியைச் சேர்ந்த மோகன் என்பவரை தாக்கி கொலை செய்ய முயற்சி செய்ததாக சுங்குவார்சத்திரம் போலீஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் குற்றச் செயலில் ஈடுபட்டு வந்த காரணங்களால் காவல் ஆய்வாளர் பேசில் பிரேம் ஆனந்த், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் பரிந்துரை செய்ததன் பேரில் ரவுடி படப்பை குணாவை ஓராண்டு குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் வைக்க மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி உத்தரவிட்டுள்ளார். பல்வேறு குற்ற வழக்குகள் தொடர்புடைய ரவுடி குணா மீது 5-வது முறையாக குண்டர் தடுப்பு சட்டம் பாய்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முதல் திருமணத்தை மறைத்து

2-வது திருமணம் செய்ய முயன்ற இளைஞர்

காவல் நிலையத்தில் பெண் அளித்த புகாரால் அம்பலம்

■ திருவள்ளூர்

திருவள்ளூர் அருகே முதல் திருமணத்தை மறைத்து 2-வது திருமணம் செய்ய முயன்ற இளைஞரால் பரபரப்பு ஏற்பட்டது.

திருவள்ளூர் அருகே கொப்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சரத்குமார் என்ற ஷாம் (31). இவருக்கும் திருவள்ளூர் அருகே உள்ள சேலை கிராமத்தைச் சேர்ந்த பிரசன்னா(26) என்பவருக்கும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

இதையடுத்து, திருமண சடங்குகள் மேற்கொள்வது தொடர்பாக பேசுவதற்காக நேற்று முன்தினம் பெண் வீட்டார் மணமகன் வீட்டுக்கு நேரில் சென்றனர். அப்போது, வீடு பூட்டப்பட்டு இருந்தது. மணமகன் வீட்டார் காவல் நிலையத்தில் இருந்தது தெரிய வந்துள்ளது.

எனவே அவர்கள் திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்துக்கு சென்றனர். அங்கு சரத்குமார், தான் வசிக்கும் பகுதியை சேர்ந்த பவித்ரா என்ற பெண்ணை தன் பெற்றோருக்கு தெரியாமல் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருமணம் செய்து, இருவரும் தனித்தனியே அவரவர் வீட்டில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், சரத்குமாருக்கு 2-வது திருமணத்துக்கு நிச்சயிக்கப்பட்டு, நேற்று (மார்ச் 16) திருமணம் நடைபெற இருந்ததையறிந்த பவித்ரா, திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தது தெரிய வந்தது.

அப்போது, போலீஸார் விசாரணையின் போது, பவித்ராவுடன் சேர்ந்து வாழ சரத்குமார் ஒப்புக் கொண்டார். ஆகவே சரத்குமார் மற்றும் பவித்ராவை போலீஸார் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த 2-வது மணப்பெண் வீட்டார், சரத்குமாருக்கு எதிராக திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். அதில், "அதிக செலவு செய்து திருமண ஏற்பாடுகளை செய்த நிலையில், முதல் திருமணத்தை மறைத்துவிட்டு, 2-வது திருமணம் செய்ய முயன்ற சரத்குமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என, குறிப்பிடப்பட்டுள்ளது. இப்புகாரின் பேரில், போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

செங்கல்பட்டு மாவட்ட கிராம ஊராட்சிகளில்

மார்ச் 28-ம் தேதிக்குள் வரி செலுத்த அறிவுறுத்தல்

■ செங்கல்பட்டு

செங்கல்பட்டு மாவட்டத்தில் கிராம ஊராட்சிகளில் வசிக்கும் மக்கள் தங்களின் சொத்து வரி உள்ளிட்ட அனைத்து வரிகளையும் மார்ச் 28-ம் தேதிக்குள் செலுத்துமாறு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கிராம ஊராட்சி அளவில் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக நிதி நிர்வாகத்தில் வீட்டு வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவை முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள 539 கிராம ஊராட்சிகளில் வசிக்கும் பொதுமக்கள், தங்கள் கிராம ஊராட்சிக்கு 2024-25-ம் நிதியாண்டுக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி (வீட்டு வரி), குடிநீர் கட்டணம் உள்ளிட்ட அனைத்து வரியினங்களையும் வரும் 28-ம் தேதிக்குள் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நிலுவையின்றி இணைய வழியில் செலுத்தி உரிய கணினி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேற்படி வரிகளை ஜி-பே மற்றும் போன்-பே போன்ற செயலிகள் மூலம் செலுத்தும் வசதிகளை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது என ஆட்சியர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

பயிற்சி ஓட்டுநர்களுக்கு கல்வி தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்க கோரிக்கை

■ தாம்பரம்

தமிழக அரசுத் துறைகளில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் நிரந்தர ஊழியர்களாக பணிபுரிகின்றனர். அவர்களுக்கு கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கவேண்டும். அம்மா பயிற்சி பள்ளிக்குச் செல்லும் ஓட்டுநர்களுக்கு தங்கும் இடம், உணவுப்படி மற்றும் இதர படிகள் வழங்க வேண்டுமென தமிழ்நாடு அரசுத்துறை ஊர்தி ஓட்டுநர்கள் தலைமை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சேர்ந்த குமார் கூறியதாவது:

10 மற்றும் 20 ஆண்டுகள் பணி நிறைவு செய்த ஊழிர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தி கூடுதல் ஊதிய மாற்றம் செய்ய வேண்டும். பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். 21 மாத அகவிலைப்படி நிலுவைத் தொகையை வழங்க வேண்டும். அரசுத் துறைகளில் உள்ள ஓட்டுநர் பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்ப வேண்டும்.

10 ஆண்டுகளுக்கு மேல் அனைத்துத் துறைகளிலும் தற்காலிகமாக பணிபுரியும் ஓட்டுநர்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்த வேண்டும். 15 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட வாகனங்களை கழிவுநீக்கம் செய்ய வேண்டும். பதவி உயர்வு இல்லாத பணியிடமாக இருப்பதால் 10-ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை படித்து முடித்து அரசு துறைகளில் 10 மற்றும் 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கடப்பாக்கம் பகுதியில் எரியாத தெரு மின்விளக்குகள்

■ மதுராந்தகம்

செங்கல்பட்டு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி கடப்பாக்கம் பகுதியில் உள்ள பல்வேறு தெருக்களில் மின்விளக்குகள் பராமரிக்கப்படாமல் உள்ளதால், இரவு நேரங்களில் அவை எரியாமல் மிகவும் இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

இதனால், இரவில் பெண்கள் தெருக்களில் அச்சத்துடன் நடமாடும் நிலை உள்ளது. மேலும், கடலுக்குச் சென்று திரும்பும் மீனவர்கள் வீடு நோக்கிச் செல்லும்போது பல்வேறு சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர். அதனால், தெருவிளக்குகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மரம் முறிந்து விழுந்து 2 பேர் உயிரிழப்பு

தனியார் நிறுவன மேலாளர் உட்பட இருவர் கைது

■ ஆவடி

அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதியில் மரம் முறிந்து விழுந்ததில் 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இது தொடர்பாக தனியார் நிறுவன ஊழியர்கள் இருவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தனியார் தொழிற்சாலையின் அருகில் காலிமனையில் உள்ள மரத்தின் கிளைகளின் ஒரு பகுதியை வெட்ட முடிவு தொழிற்சாலை நிர்வாக முடிவு செய்தது. அதன்படி நேற்று முன்தினம் சென்னை, வில்லிவாக்கம் பகுதியை சேர்ந்த தங்கராஜ்(32), விஜயகுமார்(44) மற்றும் அன்பு(42) ஆகிய 3 மரம் வெட்டும் தொழிலாளர்களை மரக்கிளைகளை வெட்டும் பணியில் ஈடுபடுத்தியது.

● தங்கராஜ், விஜயகுமார்

இயந்திரங்கள் மூலம் மரக்கிளைகளை வெட்டும் பணியில் தங்கராஜ் உள்ளிட்ட 3 தொழிலாளர்களும் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக மரத்தின் அடிப்பகுதி முறிந்து, தொழிற்சாலையில் சுற்றுச்சுவர் பகுதியில் விழுந்தது.

இச்சம்பவத்தில், பலத்த காயமடைந்த தங்கராஜ், விஜயகுமார் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த அன்பு, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து அம்பத்தூர் தொழிற்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து முதல் கட்ட விசாரணை நடத்தினர். அவ்விசாரணையின் அடிப்படையில், தனியார் தொழிற்சாலை மேலாளர் தண்டபாணி, பணி மேற்பார்வையாளர் என இருவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

தாட்கோ திட்டம்: இடைத்தரகர்களுக்கு திருவள்ளூர் ஆட்சியர் எச்சரிக்கை

■ திருவள்ளூர்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்காக முதல்வரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சமூக பொருளாதாரத் தொழில் முனைவு திட்டம், நன்னிலம் மகளிர் நிலஉடமை திட்டம், பி.எம். அஜய் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த திட்டங்களின் கீழ் பயன் பெற, பயனாளிகளுக்கான நேர் காணல் உரிய விதிமுறைகளின்படி நடத்தப்பட்டு விண்ணப்பங்கள், சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு தகுதியின் அடிப்படையிலும் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டும் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், விண்ணப்பதாரர்களிடம் சில இடைத்தரகர்கள் முறைகேடுகளில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளது.

ஆகவே, விண்ணப்பதாரர்கள் தங்களை இடைத்தரகர்கள் அணுகினால், அவர்களை தவிர்ப்பதுடன் அவர்கள் கேட்கும் பணம் உள்ளிட்ட எதையும் வழங்க வேண்டாம். மேலும், தாட்கோ திட்டங்களுக்கான பயனாளிகள், மாவட்ட நிர்வாகம் மூலம்தான் தேர்வு செய்யப்படுவார்கள். ஆகவே, தாட்கோ அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் எனக் கூறி, விண்ணப்பதாரர்களை அணுகும் இடைத்தரகர்கள் குறித்து தாட்கோ அலுவலக கவனத்துக்கு வரும் பட்சத்தில் முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் மீது உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என, மாவட்ட ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.

ராட்சத ராட்டினத்தின் உதிரி பாகம் விழுந்து 2 பேர் காயம்

■ கானத்தூர்

தனியார் பொழுதுபோக்குப் பூங்காவில் ராட்சத ராட்டின உதிரிப் பாகம் விழுந்து இருவர் காயமடைந்த சம்பவத்தில் பூங்கா மேலாளர் உள்ளிட்ட 4 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

கிழக்கு கடற்கடை சாலை கானத்தூரில் ஒரு பொழுதுபோக்குப் பூங்கா உள்ளது. கடந்த 13-ம் தேதி அங்குள்ள படகு வடிவ ராட்டினத்தில் 15 பெண்கள் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்டோர் ஏறினர். அப்போது எதிர்பாராத விதமாக ராட்டினத்தின் உதிரிப் பாகம் கழன்று இருவர் மீது விழுந்துள்ளது. இதில் லேசான காயம் ஏற்பட்டது. இதை கீழே நின்ற பொதுமக்கள் சிலர் தங்கள் செல்போனில் படம் பிடித்து பாதுகாப்பு குறைபாடு என சமூக வலைதளங்களில் வெளியிட்டனர்.

கானத்தூர் போலீஸார் விசாரணை நடத்தி பொழுதுபோக்குப் பூங்காவின் மேலாளர் உள்ளிட்ட 4 பேர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

கத்திவாக்கம், சாலிகிராமம் பகுதிகளில்

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட கும்பாபிஷேகம்

■ சென்னை

கத்திவாக்கம், சாலிகிராமம் ஆகிய பகுதிகளில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடங்களின் கும்பாபிஷேகங்களை ஆதிபராசக்தி ஆன்மிக இயக்க துணைத் தலைவர் கோ.பா.செந்தில்குமார் நேற்று நடத்தி வைத்தார்.

கடந்த 13-ம் தேதி எண்ணூர் மற்றும் சாலிகிராமத்தில் அமைந்திருக்கும் ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடங்களின் கும்பாபிஷேக விழா தொடங்கியது. 14-ம் தேதி காலை கோபுரக் கலசங்கள் சாபித நிகழ்ச்சி நடைபெற்றது. 15-ம் தேதி சக்தி கொடி ஏற்றுதல் நிகழ்ச்சியும், முதல் கால வேள்வி பூஜையும், மாலை 2-ம் கால வேள்வி பூஜையும் நடைபெற்றன. இரவு அஷ்டபந்தன மருந்து சாற்றுதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. நேற்று (16-ம் தேதி) காலை 3-ம் கால வேள்வி பூஜை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு எண்ணூரில் உள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடத்தின் கும்பாபிஷேக விழாவில் ஆன்மிக இயக்கத் துணைத் தலைவர் கோ.ப.செந்தில் குமார் கலந்துகொண்டு கோபுரக் கலசத்துக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்து வைத்தார். தொடர்ந்து காலை 11 மணிக்கு சாலிகிராமத்தில் உள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடத்தில் கும்பாபிஷேகம் செய்து வைத்தார். பின்னர் கருவறையில் உள்ள ஆதிபராசக்தி அம்மனுக்கு அபிஷேகம் செய்து தீபாராதனை செய்தார்.

➤ சென்னையில் 2 இடங்களில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடங்களின் கும்பாபிஷேகங்களை ஆதிபராசக்தி ஆன்மிக இயக்க துணை தலைவர் கோ.பா.செந்தில்குமார் நடத்தி வைத்தார்.

சாலிகிராமம் விழாவில் தெலங்கானா மாநில முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டார். இந்த விழாவில் ஏராளமான பொதுமக்களும், செவ்வாடை தொண்டர்களும், பக்தர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

சாலிகிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, ஒருவருக்கு வீட்டை சரி செய்ய ரூ.90 ஆயிரம், கல்வி உதவித் தொகையாக ஒரு நபருக்கு ரூ.10 ஆயிரம், மருத்துவ நிதி உதவியாக ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது. ஆன்மிக குரு பங்காரு அடிகளார் 85-வது அவதார திருநாள் பெருமங்கல விழாவை முன்னிட்டு 85 பேருக்கு ஆடை தானம் வழங்கப்பட்டது. முத்துராமலிங்கம் முதியோர் இல்லத்துக்கு ரூ.5 ஆயிரம் மதிப்பில் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

விழா ஏற்பாடுகளை எண்ணூர் சித்தர் சக்தி பீட தலைவர் மாதவன், சாலிகிராமம் சக்தி பீட தலைவர் ராமசாமி ரெட்டியார் மற்றும் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" எனும் அடிப்படையில் மின் ஏலத்தின் (e-auction) மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	14.03.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	34239430000811	1) திரு. லட்சுமி நாராயணன் T, 2) திருமதி. சுமதி T	12-07-2024	28-01-2025	ரூ.8,48,016.63 (ரூபாய் எட்டு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து பதினாறு மற்றும் பைசா அறுபத்தி மூன்று மட்டும்)	01.04.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.6,32,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பத்தி இரண்டு ஆயிரம் மட்டும்)	ரூ.63,200/- (ரூபாய் அறுபத்தி மூன்றாயிரத்து இருநூறு மட்டும்)	15.04.2025 நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	11.04.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

அட்டவணை சொத்து : பிளாட் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், பிளாட் எண்.3, தரை தளம், அளவுகள் 24.40 சதுர மீட்டர் அல்லது 262.5 சதுர அடி பரப்பு கட்டிடம், பிளாக் எண். 2, LIG பிளாட்ஸ், திருமுல்லைவாயல் திட்டம் நிலத்தில் கட்டப்பட்டது மற்றும் சரிசமவிகித நிலம் ஏரியா அளவுகள் 392 சதுர அடி, ச.எண். 618 பகுதி மற்றும் 620 பகுதிக்குட்பட்ட எண்.16, திருமுல்லைவாயல் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் சார்-பதிவு மாவட்டம் மற்றும் வடசென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் எல்லைகள் : வடக்கில் : மனை எண்.2/10, தெற்கில் : பிளாட் எண்.2/2, கிழக்கில் : பிளாட் எண்.2/4, மேற்கில் : பிளாக் எண்.3.

மின் ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு" என்ற அடிப்படையில் "ஆன்லைனில்" நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் M/s. 4 Closure இணையதளம் https://bankauctions.in & www.foreclosureindia.com மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின்-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு M/s. 4 Closure, தொடர்பு திரு.M.தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விளக்கங்களுக்கு ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலில் P, (மொபைல் எண். 9884474084), email: salil.p@janabank.com, திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849), email: durai.murugan@janabank.com, திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653) email: ranjan.naik@janabank.com தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 17.03.2025, இடம் : சென்னை

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ इंडिया
Central Bank of India

எங்களது கிளை இடமாற்றத்திற்கான பொது அறிவிப்பு

4/3பி, சி வி நாயுடு சாலை, திருவள்ளூர்-602001, என்ற முகவரியில் இயங்கி வரும் சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா, திருவள்ளூர் கிளையில் 17.03.2025 அன்று பின்வரும் முகவரிக்கு மாற்றப்படுகிறது.

புதிய இடத்தின் முகவரி
சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா, திருவள்ளூர் கிளை, 2715, காக்களூர் பை பாஸ் ரோடு, திருவள்ளூர் - 602001.

தொடர்ந்து உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்...

தேதி: 17.03.2025 கிளை மேலாளர்

U GRO CAPITAL

U GRO கேப்பிட்டல் லிமிடெட்
4வது தளம், டவர் 3, ஈக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், LBS சாலை, கூர்லா, மும்பை 400070

அடமான சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையா சொத்து(கள்) விற்பனைக்கான 15 நாட்கள் ஏல விற்பனை அறிவிப்பு ["பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்)"] நிதி சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002-ன்கீழ் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 மற்றும் 9-ன் விதிமுறையின்கீழ்

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்-களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பதாவது, U GRO கேப்பிடல் லிமிடெட் ("கடன் அளித்தவர்") அவர்களிடம் கீழ்குறிப்பிட்டுள்ள அடமானம் சொத்துக்கள், கடன் அளித்தவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சுவாதீனம் எடுத்து, அதை "அடிப்படையில் எங்கு உள்ளதோ மற்றும் "அடிப்படையில் எப்படி உள்ளதோ" மற்றும் "எந்தவித ஆதாரம் இல்லாமல்" என்ற அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) அவர்களிடமிருந்து கடன் அளித்தவருக்கு செலுத்த வேண்டிய கீழ்குறிப்பிட்டுள்ள நிலுவை தொகை மற்றும் மேலும் வட்டி மற்றும் மற்ற பணம் செலுத்தும் நாள் வரை உள்ள செலவினங்கள் ஆகியவற்றுவை வசூலிக்க கீழ்குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் ஏலம் முறையில் விற்பனை செய்ய உள்ளார். ரிசர்வ் தொகை, முன்வைப்பு தொகை (EMD) மற்றும் முன்வைப்புத் தொகையின் கடைசி தேதி ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வ. எண்.	கடன்தாரர்(கள்)/ ஜாமீன் தாரர்(கள்) விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு விவரம்	ஏலம் விவரங்கள்	
1.	1. Kandan Traders 2. திரு. சந்திரசேகர் கந்தன் 3. திருமதி. ராஜலட்சுமி கடன் கணக்கு எண்: 600001SEC0028981, HCFCHESEC00001010110, HCFCHESEC00001004400	அறிவிப்பு நாள் : 18.06.2024	ரிசர்வ் தொகை	ரூ. 3,38,50,183/-
			EMD	ரூ. 33,85,018/-
		நிலுவைத் தொகை ரூ.3,17,32,295/- 18.06.2024 அன்றைய தேதியில்	EMD செலுத்த கடைசி நாள்	05.04.2025
			ஏலம் நாள்	07-04-2025
			ஏலம் நேரம்	11 AM to 01 PM
			ஏலம் உயர்